வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண். 1313 /ஆ1 /2022, நாள் : 10.10.2022

பொருள்: தமிழ் வளர்ச்சி – 2021–2022–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்பு – நாட்டிற்காக பாடுபட்ட தலைவர்களின் பிறந்தநாளன்று மாவட்ட அளவில் பள்ளி மாணவர்களுக்கு பேச்சுப் போட்டிகள் ஆண்டுதோறும் நடத்திப் பரிசு வழங்குதல் – அக்டோபர் 02–ஆம் நாள் அண்ணல் காந்தியடிகள் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு பேச்சுப்போட்டிகள் அக்டோபர் 12–ஆம் நாளன்று நடத்த திட்டமிடப் பெற்றுள்ளமை – வேலூர் மாவட்டத்தில் உள்ள பள்ளி மாணவர்களை போட்டியில் கலந்து கொள்வதனை உறுதி செய்தல் மற்றும் பேச்சுப்போட்டியினை நடத்துதல் – தொடர்பாக.

பார்வை : வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண்.247/2022, நாள். 30.09.2022.

#######

பார்வையில் காணும் கடிதத்தின்படி தமிழ் வளர்ச்சி – 2021–2022–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்பு நாட்டிற்காக பாடுபட்ட தலைவர்களின் பிறந்தநாளன்று மாவட்ட அளவில் பள்ளி மாணவர்களுக்கு பேச்சுப் போட்டிகள் ஆண்டுதோறும் நடத்திப் பரிசு வழங்குதல் சார்ந்து அக்டோபர் 02–ஆம் நாள் அண்ணல் காந்தியடிகள் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு பேச்சுப்போட்டிகள் அக்டோபர் 12–ஆம் நாளன்று வேலூர், அரசு முஸ்லிம் மேல்நிலைப் பள்ளியில் முற்பகல் 10.00 மணிக்கு நடத்தப் பெறவுள்ளது. எனவே, இணைப்பில் உள்ள பேச்சுப் போட்டியில் கலந்துகொள்ள விருப்பம் தெரிவித்துள்ள 25 மாணவ, மாணவிகளை உரிய பரிந்துரையுடன் 12.10.2022–ஆம் நாளன்று மாவட்ட அளவில் நடைபெறும் பேச்சுப் போட்டியில் பங்கேற்க ஓர் ஆசிரியர் / பாதுகாவலருடன் அனுப்பி வைக்குமாறு சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

மேலும், போட்டியினை பொறுப்பேற்று நடத்துவதற்கும் மற்றும் பேச்சுப் போட்டி நடத்த நடுவர்களாக இணைப்பில் உள்ள 3 முதுகலை தமிழாசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

இணைப்பு– பார்வைக் கடித நகல்
மாணவ, மாணவியர் பெயர்ப்பட்டியல்
மற்றும் நடுவர்கள் பட்டியல்

பெறுநர்
சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியர்கள்/போட்டி நடுவர்கள்
(சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மூலமாக)
நகல்– மாவட்ட தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர், வேலூர்.
நகல்– தலைமை ஆசிரியர், அரசு முஸ்லீம் மேல்நிலைப் பள்ளி, வேலூர்.
(மேற்காண் போட்டிக்கான முன்னேற்பாடுகளை செய்யும் பொருட்டு)

//ப.த.//

Scanned with CamScanner

# தமிழ் வளர்ச்சித் துறை

அனுப்புநர்

திரு. பெ. குமாரவேல் பாண்டியன் இ.ஆ.ப., அவர்கள்
மாவட்ட ஆட்சித் தலைவர்
வேலூர் மாவட்டம்

பெறுநர்

முதன்மைக் கல்வி அலுவலர்,
முதன்மைக் கல்வி அலுவலகம்,
வேலூர் மாவட்டம் -09.

திருவள்ளுவராண்டு 2053 / சுபகிருது / புரட்டாசி 13
ந.க.எண். 247 /2022, நாள். 30.09.2022

ஐயா,

பொருள்: தமிழ் வளர்ச்சி - 2021 - 2022ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்பு - நாட்டிற்காகப் பாடுபட்ட தலைவர்களின் பிறந்தநாளன்று மாவட்ட அளவில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்குப் பேச்சுப் போட்டிகள் ஆண்டுதோறும் நடத்திப் பரிசுகள் வழங்குதல் - அக்டோபர் 02ஆம் நாள் அண்ணல் காந்தியடிகள் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு பேச்சுப்போட்டிகள் அக்டோபர் 12ஆம் நாளன்று நடத்த திட்டமிடப் பெற்றுள்ளமை - வேலூர் மாவட்டத்தில் உள்ள பள்ளி மாணவர்களை போட்டியில் கலந்து கொள்வதனை உறுதி செய்தல் மற்றும் பேச்சுப்போட்டியினை சிறப்புற நடத்தித்தரக் கேட்டல் - தொடர்பாக.

பார்வை:
1. தமிழ் வளர்ச்சித் துறை 2021-22ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை எண் 46, அறிவிப்பு எண் 17, நாள். 31.08.2021
2. தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (த.வ. 1.1)த் துறை, அரசாணை (நிலை) எண் 42, நாள். 18.04.2022
3. சென்னை, தமிழ் வளர்ச்சி இயக்குநரின் குறிப்பாணை எண் ந.க.எண். 9955 /ஆ.மொ.4/2022, நாள். 20.09.2022

நாட்டிற்காகப் பாடுபட்ட தலைவர்களான மகாத்மா காந்தி, ஜவகர்லால் நேரு, அண்ணல் அம்பேத்கர், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் பிறந்தநாளன்று ஆண்டுதோறும் மாவட்ட அளவில் கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்களுக்கு பேச்சுப் போட்டிகள் நடத்திப் பரிசு, பாராட்டுச்சான்றிதழ் வழங்கப்படும் என்ற அரசாணையின் அடிப்படையில் அண்ணல் காந்தியடிகள் பிறந்தநாளை முன்னிட்டு அனைத்து மாவட்டங்களில் அந்தந்த மாவட்ட அளவில் பள்ளி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி 12.10.2022ஆம் நாளன்று நடத்தப்பெற வேண்டுமென பார்வை (3)இல் காணும் குறிப்பாணையில் அறிவிக்கப்பெற்றுள்ளது.

Scanned with CamScanner

## தமிழ் வளர்ச்சித் துறை - வேலூர் மாவட்டம்

### அண்ணல் காந்தியடிகள் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு பள்ளி மாணாக்கர்களுக்கான மாவட்ட அளவில் பேச்சுப் போட்டிகள் நடத்துதல் தொடர்பான விதிமுறைகள்

| | |
|---|---|
| 1 | பேச்சுப்போட்டி 12.10.2022 புதன் கிழமை வேலூர் அரசு முஸ்லிம் மேல்நிலைப்பள்ளியில் முற்பகல் 9.30மணியளவில் மாணவ / மாணவியர்களின் வருகையைப் பதிவு செய்து உறுதி செய்யப்படும். போட்டி காலை 10.00மணியளவில் தொடங்க வேண்டும். |
| 2. | பேச்சுப்போட்டிகளில் பங்கேற்கும் பள்ளி மாணவ / மாணவிகள் தாங்கள் பயிலும் பள்ளி தலைமையாசிரியரின் பரிந்துரைக்கடிதம் பெற்று வந்தால் மட்டுமே போட்டியில் பங்கேற்க முடியும். |
| 3. | பள்ளி மாணவ / மாணவியர்களைப் பள்ளி ஆசிரியர் அல்லது பெற்றோருடன் மட்டுமே போட்டிக்கு அனுப்பி வைக்க வேண்டும். தனியாக மாணவ / மாணவிகளை அனுப்புதல் கூடாது. மாணவ / மாணவியர் பாதுப்பாக அழைத்துவருபவர்களே மதிய உணவுக்கு ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். |
| 4. | பள்ளி மாணவ / மாணவியர் பள்ளிச் சீருடையில் வந்தால் மட்டுமே போட்டியில் பங்கேற்க அனுமதிக்கப்படுவர். |
| 5. | போட்டியில் பேசுவதற்கு ஒருவருக்கு மூன்று நிமிடங்கள் மட்டுமே அளிக்கப்படும். |
| 6. | போட்டிகளில் பங்கேற்கும் மாணவர்களுக்கு மதிப்பெண் அளிப்பதில் நடுவர்களின் தீர்ப்பே முடிவானது. |
| 7. | போட்டிக்கான தலைப்புகள் முன்கூட்டியே முதன்மைக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பெறும். |
| 8. | மேலும் பேச்சுப்போட்டி நாளன்று மாணவர்களுக்குப் போட்டிகளின் தலைப்புகள் படித்து காண்பிக்கப்படும். |
| 9. | பேச்சுப்போட்டியில் பங்கேற்கும் மாணவர்கள் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பெற்ற அனைத்துத் தலைப்புகளிலும் பேசுவதற்கு உரிய தயாரிப்புடன் வரவேண்டும். |
| 10 | பேச்சுப்போட்டியில் பங்கேற்கும் மாணவர்களுக்கு குலுக்கல் சீட்டு முறையில் தலைப்பு வழங்கப்படும். அச்சீட்டில் வரும் தலைப்பில் மட்டுமே மாணவ / மாணவியர் பேசுவதற்கு அனுமதிக்கப்படுவர். |
| 11 | போட்டி தொடங்கியபின் வரும் மாணவ / மாணவியர் போட்டியில் பங்கேற்க அனுமதிக்கப்படமாட்டார்கள். |
| 12 | போட்டிக்கான தலைப்புகள் : |

| அண்ணல் காந்தியடிகள் பிறந்தநாள் பேச்சுப்போட்டிக்கான தலைப்புகள் | |
|---|---|
| 1. | அண்ணலின் அடிச்சுவட்டில் |
| 2. | காந்தி கண்ட இந்தியா |
| 3. | வேற்றுமையில் ஒற்றுமை |
| 4. | பாரத தேசமென்று பெயர் சொல்லுவோம் |

தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர்
வேலூர் மாவட்டம்

Scanned with CamScanner

போட்டி உரிய நாளில் நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்கள் விவரம் அன்றே அறிவிக்கப்படும். போட்டிக்கான விதிமுறைகளும் பங்கேற்புப்படிவமும் மாவட்டத்தில் செயற்பட்டுவரும் மாவட்டக்கல்வி, வட்டாரக்கல்வி அலுவலர்கள் மற்றும் பள்ளி தலைமையாசிரியருக்கு தெரிவிக்கும்பொருட்டு இதனுடன் இணைக்கப்பட்டுள்ளன.

போட்டியினை பொறுப்பேற்று நடத்துவதற்கு ஒரு அரசுப்பள்ளித் தலைமையாசிரியர் ஒருங்கிணைப்பாளராகவும் மற்றும் பேச்சுப்போட்டி நடத்துதல் தொடர்பில் நடுவர்களாக 3 அரசுப்பள்ளியிலிருந்து 3 முதுகலைத் தமிழாசிரியர்களை நியமித்து அவர்கள் பற்றிய விவரங்களையும் போட்டியில் பங்கேற்க தெரிவு செய்யப்பெற்ற மாணவர்களின் பட்டியலையும் வேலூர் மாவட்டத் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநருக்கு 10.10.2022ஆம் நாளுக்குள் பின்வரும் முகவரியில் நேரில் / அஞ்சலில் அல்லது tamilvalarchivlr17@gmail.com என்ற மின்னஞ்சலில் அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

<u>முகவரி</u>

மாவட்டத் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர்.
அறை எண்: 421, "அ" பிரிவுக்கட்டடம்,
நான்காம் தளம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,
சத்துவாச்சாரி, வேலூர் - 632 009.
தொலைபேசி எண்: 0416 - 2256166
மின்னஞ்சல்: tamilvalarchivlr17@gmail.com

(ஒம்)., பெ. குமாரவேல் பாண்டியன்
மாவட்ட ஆட்சியர்
வேலூர் மாவட்டம்

// நேர்படி அனுப்பப்பெறுகிறது//

ஒம்/- ப.இராஜேசுவரி
மாவட்ட ஆட்சியருக்காக
தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர்
வேலூர் மாவட்டம்

Scanned with CamScanner

இக்குறிப்பாணைக்கிணங்க அண்ணல் காந்தியடிகள் அவர்களின் பிறந்தநாளையொட்டி வேலூர் மாவட்ட அளவில் பள்ளி மாணவர்களுக்கான பேச்சுப்போட்டி 12.10.2022 ஆம் நாளன்று அரசு முஸ்லிம் மேல்நிலைப்பள்ளியில் முற்பகல் 10.00 மணிக்கு நடத்தப்பெறவுள்ளது.

பேச்சுப்போட்டியில் பங்கு பெற்று வெற்றி பெறும் மாணவர்களுக்கு மாவட்ட அளவில் முதல் பரிசாக ரூ. 5000/- உம், இரண்டாம் பரிசாக ரூ. 3000/- உம், மூன்றாம் பரிசாக ரூ.2000/- உம் அதனுடன் பங்கு பெறும் மாணவர்களுள் அரசுப்பள்ளி மாணவர்கள் இருவரை மட்டும் தெரிவு செய்து ஒவ்வொருவருக்கும் தனித்தனியே சிறப்புப் பரிசாக ரூ. 2000/- உம் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பெறும்.

மாவட்ட அளவில் பள்ளி மாணாக்கர்களுக்குப் பேச்சுப் போட்டிகள் நடத்துதல் தொடர்பில் உரிய வழிமுறைகளின் அடிப்படையில் முதன்மைக் கல்வி அலுவலர், மாவட்டத்தில் செயற்பட்டு வரும் பள்ளிகளில் (அரசுப் பள்ளிகள், நிதியுதவிபெறும் பள்ளிகள் மற்றும் பதின்மப் பள்ளிகள் உட்பட) 6 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு கீழ்நிலை அளவில் பேச்சுப் போட்டிகள் நடத்தி மாவட்ட அளவில் 25 பேருக்கு மிகாமல் ( பள்ளிக்கு ஒருவர் வீதம்) தெரிவு செய்து உரிய பரிந்துரையுடன் 12.10.2022 ஆம் நாளன்று மாவட்ட அளவில் நடைபெறும் பேச்சுப் போட்டியில் பங்கேற்க அனுப்பி வைத்தல் வேண்டும்.

கீழ்க்காணும் போட்டிக்கான தலைப்புகள் மாணவர்களுக்கு முன்னரே அறிவிக்கப்பட வேண்டும்.

| அண்ணல் காந்தியடிகள் பிறந்தநாள் பேச்சுப்போட்டிக்கான தலைப்புகள் | |
|---|---|
| 1. | அண்ணலின் அடிச்சுவட்டில் |
| 2. | காந்தி கண்ட இந்தியா |
| 3. | வேற்றுமையில் ஒற்றுமை |
| 4. | பாரத தேசமென்று பெயர் சொல்லுவோம் |

Scanned with CamScanner

## தமிழ் வளர்ச்சித் துறை

**வேலூர் மாவட்டத்தில் அண்ணல் காந்தியடிகள் பிறந்தநாளையொட்டி 12.10.2022 அன்று நடத்தப்பெறவுள்ள மாவட்ட அளவிலான பள்ளி மாணாக்கர்களுக்கான பேச்சுப் போட்டியில் பங்கேற்பவர்களுக்கான படிவம்**

1 மாணவரின் பெயர் (தமிழில்) :

2 தந்தையின் பெயர்

3 பிறந்த நாள் / வயது

4 பயிலும் பள்ளி/ முகவரி :

(தொலைபேசி எண்ணுடன்)

5 பயிலும் பாடப்பிரிவு

6 பயிலும் ஆண்டு

7 இல்ல முகவரி / தொலைபேசி எண்

8 மாணவரின் மாதிரி ஒப்பம் (தமிழில்) 1.

2

பரிந்துரை

இப்பள்ளியில் பயிலும் செல்வன்/செல்வி ........................................................ தமிழ் வளர்ச்சித் துறையால் மாவட்ட அளவில் நடத்தப்பெறவுள்ள பேச்சுப் போட்டியில் கலந்து கொள்ள பரிந்துரைக்கப்பெறுகிறார்.

முத்திரை

தலைமையாசிரியர் ஒப்பம்

Scanned with CamScanner

**மாவட்ட அளவிலான அண்ணல் காந்தியடிகள் பிறந்த தின பேச்சுப் போட்டி,**

**வேலூர் மாவட்டம்**

| வ. எண் | மாணவர் பெயர் | வகுப்பு | பள்ளியின் பெயர் |
|---|---|---|---|
| 1 | வி.தேன்மொழி | 10 | அ.உ.நி.பள்ளி, குருவராஜபாளையம் |
| 2 | ஆர்.பாவனா | 10 | அ.ம.மே.நி.பள்ளி, கீ.வகுப்பம் |
| 3 | பி.விஷ்ணுவர்த்தினி, | 7 | அ.ம.மே.நி.பள்ளி, நடுப்பேட்டை |
| 4 | ஆர்.ஷாலினி | 8 | அ.உ.நி.பள்ளி, சேம்பள்ளி |
| 5 | ப.மதுமிதா | 9 | அ.உ.நி.பள்ளி, ஆசனாம்பட்டு |
| 6 | வி.மதுமிதா | 12 | அ.ம.மே.நி.பள்ளி, பள்ளிகொண்டா |
| 7 | ஆர்.யோகலட்சுமி | 9 | அ.மே.நி.பள்ளி, தட்டப்பாறை |
| 8 | இரா.மீனலோஷினி | 12 | அ.மே.நி.பள்ளி, அழிஞ்சிகுப்பம் |
| 9 | ஏ.சாய்சரண் | 8 | தி.மு.கி.வா.அ.ஆ.மே.நி.பள்ளி, காங்கேயநல்லூர் |
| 10 | ல.ஜோதிபிரியா | 9 | அ.உ.நி.பள்ளி, பல்லலகுப்பம் |
| 11 | ஜெ.கிருத்திகா | 10 | அ.ம.உ.நி.பள்ளி, கீழ்அரசம்பட்டு |
| 12 | ச.நவீன்குமார் | 10 | அ.மே.நி.பள்ளி, கம்மவான்பேட்டை |
| 13 | க.சந்தோஷ் | 6 | தொன்போஸ்கோ உ.நி.பள்ளி, வேலூர் |
| 14 | உ.பிரவீன் | 12 | ந.கி.மு.மே.பள்ளி, சாய்நாதபுரம் |
| 15 | எஸ்.அறிவுச்செல்வி | 9 | அ.ம.மே.நி.பள்ளி, ஊசூர் |
| 16 | ச.முகமது அகில் | 11 | அ.மே.நி.பள்ளி, கணியம்பாடி |
| 17 | மு.ஸ்வரூபஸ்ரீ | 11 | மாந.அ.ம.மே.நி.பள்ளி, தோட்டப்பாளையம் |
| 18 | தி.நக்ஷத்ரா | 9 | புனித மரியன்னை ம.மே.நி.பள்ளி, வேலூர் |
| 19 | ஜி.யுவஸ்ரீ | 9 | அ.உ.நி.பள்ளி, செம்பேடு, வேலூர் |
| 20 | ஏ.சுவேதா | 12 | தி.மு.கி.வா.அ.ம.மே.நி.பள்ளி, காங்கேயநல்லூர் |
| 21 | எஸ்.ஷர்மிளா | 9 | அ.ம.மே.நி.பள்ளி, காட்பாடி |
| 22 | பி.இளவரசி | 9 | அ.உ.நி.பள்ளி, தாதிரெட்டிப்பள்ளி |
| 23 | எஸ்.நிஜானா | 10 | அ.உ.நி.பள்ளி, கரிகிரி |
| 24 | எஸ்.சுவாதி | 12 | அ.ம.மே.நி.பள்ளி, திருவலம் |
| 25 | யு.யோகேஸ்வரி | 9 | அ.ம.மே.நி.பள்ளி, இலத்தேரி |

| | | |
|---|---|---|
| **நடுவர்கள்** | 1 | திரு.பழனி, முதுகலை தமிழாசிரியர்,<br>ஈ.வே.ரா.நாகம்மையார் அ.ம.மே.நி.பள்ளி, வேலூர் |
| | 2 | திரு.சீனிவாசன், தமிழாசிரியர், அ.ம.மே.நி.பள்ளி,<br>கீ.வகுப்பம் |
| | 3 | திரு.குப்புசாமி, தமிழாசிரியர், அ.உ.நி.பள்ளி,<br>பள்ளிகுப்பம் |

Scanned with CamScanner